

- குழந்தைக் கவிஞர் -

# நேரு தந்த பொம்மை

குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா



# நேரு தந்த பொம்மை

குழந்தைக் கவிஞர்

அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

**184 பிராட்வே, சென்னை 108**

வெளியிட்டோர்:
குழந்தைப் புத்தக நிலையம்
சென்னை-40

விலை ரூ. 4-50

POETRY

| | | |
|---|---|---|
| **Book'S Title** | : | NEHRU THANTHA BOMMAI (Interesting anecdotes from the life of Jawaharlal Nehru) |
| **Author** | : | AL. VALLIAPPA |
| **Illustrator** | : | LATHA |
| **Language** | : | TAMIL |
| **Paper** | : | 11.6 Kg |
| **Printing Point** | : | 12 Point |
| **Size** | : | 18.5 × 12.5 Cm |
| **Pages** | : | 56 |
| **Edition** | : | First Edition - 14th November 1977 (Children's day) |
| | : | 2nd Edition, 1987 |
| **Price** | : | Rs. 4.50 |
| **Publisher** | : | KULANDAI PUTHAKA NILAYAM |
| | : | Madras - 40 |
| **Sole Distributors** | : | PAARI NILAYAM, Madras - 108 |
| **Printers** | : | DEIVAM PRINTING PRESS, Devakottai - 623 302. |

சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவைத் தலைவர்

**புலவர், கவிஞர்**

**தணிகை உலகநாதன்** அவர்களின்

# அணிந்துரை

சில ஆண்டுகளுக்கு முன்னே நடந்தது, இன்னும் என் உள்ளத்தில் பசுமையோடிக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சி, நினைக்க நினைக்க உள்ளத்தில் இன்பத்தேன் துளிக்கிறது. சென்னை வானொலிநிலையத்தார் குழந்தைகள் திருநாள் சிறப்பு நிகழ்ச்சியை நடத்தினார்கள். நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்த நீதிபதி எஸ். மகராஜன் அவர்கள் தமது பேச்சு முடிவில், குழந்தைக் கவிஞர் - பிள்ளைக் கவியரசு - அழ. வள்ளியப்பாவின்

**'அருமை நேரு பிறந்தது**
**அலகா பாத்து நகரிலே.**
**இளைஞர் நேரு பிறந்தது**
**இங்கி லாந்து நாட்டிலே.**
**தீரர் நேரு வாழ்ந்தது**
**தில்லி நகரம் தன்னிலே**
**இன்று நேரு வாழ்வது**
**எங்கள் பிஞ்சு நெஞ்சிலே.'**

என்னும் பாடலைப் பாடினார். அவ்வளவுதான்; கூடியிருந்த குழந்தை ரசிகர்களின் கைதட்டல் வான்முட்ட அதிர்ந்தது. அன்றைய வானொலி நிலைய இயக்குநராக இருந்து, இன்று தொலைக்காட்சி டைரக்டர் ஜெனரலாக இருக்கும் திரு.பி.வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மேடையில் ஒரு துள்ளு துள்ளினார் 'நேருவின் நினைவை மழலைச் செல்வங்களின் மனத்தில் பதிய வைக்க இதைவிடச் சிறந்த பாடல் என்ன இருக்கிறது?' என்று வியந்து பாராட்டினார்.

தித்திக்கும் இந்த முத்திரைப் பாடலை முதற்பாடலாகக் கொண்டு, நண்பர் வள்ளியப்பா அவர்கள் **நேரு தந்த பொம்மை** என்னும் அருமையான நூலைப் படைத்திருக்கிறார். திரு அழ. வள்ளியப்பா அவர்கள் குழந்தை இலக்கிய உலகின் ஒளி விளக்கு. வாழ்நாளெல்லாம் குழந்தைகளுக்காகவே எழுத்தாலும் பேச்சாலும் அரும்பாடுபட்டு வருபவர்; பிறரையும் குழந்தைகளுக்காக எழுத வைத்துக் குழந்தை எழுத்தாளர்களின் உற்பத்திச் சாலையாக விளங்குபவர்.

ஒருசமயம் நேரு அவர்கள் பொம்மைக்காரனிடம் இருந்த எல்லாப் பொம்மைகளையும் விலைக்கு வாங்கிக் குழந்தைகளுக்கு அன்பளிப்பாக வழங்கினார். இந்நிகழ்ச்சியை அமுதக் கவிதைகளால் சித்திரித்த கவிஞர் **நேரு தந்த பொம்மை** என்னும் தலைப்பையே இந்தப் புத்தகத்துக்குச் சூட்டியுள்ளார். இந்நூல் நேருவின் வாழ்க்கையில் நேர்ந்த சுவையான நிகழ்ச்சிகளையும் அவருடைய அருமை பெருமைகளையும் எடுத்துக் கூறும் கவிதை மலர்கள் பூத்துக் குலுங்கும் ஒரு பூஞ்சோலை. பொன் குடத்துக்குப் பொட்டு வேண்டுமா? இந்த அருமையான நூலுக்கு அணிந்துரை வேண்டுமா?

'கொண்டவர்க்கு எது பிடிக்கும்; குழந்தைகள் எதை விரும்பும்?' என ஒரு நல்ல தாய் இனிய உணவைச் சமைக்கிறாள். அத்தகைய தாயுள்ளம் நம் கவிஞருக்கும் உண்டு. பிஞ்சுச் செல்வங்கள் சந்த இன்பத்தோடு பாடி ஆடும் வண்ணம் கவிதைச் சமையல் படைத்துள்ளார், குழந்தைக் கவிஞர். தின்னத் தின்னத் தெவிட்டாத மிட்டாய்க் கடையை விரித்துள்ளார். இனிமை எளிமை, பொருளமைதி, கற்பனை நயம், உவமை நயம், நகைச்சுவை ஆகிய அனைத்தும் இவர் பாடல்களில் பின்னிக்கிடக்கின்றன. ஒவ்வொரு பாடலையும் படிக்கும் போது நேருவையே நேரில் காண்பது போன்ற உணர்ச்சி தோன்றுகிறது.

**சின்னஞ் சிறுவர் நம்மையும்**
**சிவந்த ரோஜா மலரையும்**
**என்றும் மறந்தி டாதவர்**
**எவரும் போற்றும் நல்லவர்**

என்னும்பாடல் நேரு அவர்களுக்குக்குழந்தைகளிடம் இருந்த பேரன்பையும் பெருமதிப்பையும் காட்டுகிறது.

ஒரு நாள் நேருவை வீட்டில் காணவில்லை. எங்கும் ஒரே பரபரப்பு; அதிகாரிகளும் காவலரும் பல இடங்களிலும் தேடி அலைந்தனர். முடிவில் நேரு அவர்கள் பூங்கா ஒன்றில் குழந்தைகளின் ஆடல்பாடல்களைக்கண்டு களித்துத்தாமும் அவர்களுடன் கும்மாளமடித்துக்கொண்டிருப்பதைப்பார்த்துவியந்தனர். இந்த நிகழ்ச்சிபற்றிக் குழந்தைக் கவிஞர் எவ்வளவு அருமையாகப் பாடுகிறார், பாருங்கள்:

**கோடை வெயிலைப் போன்றது என்றும்**
**அரசியல் உலகம் தான்.**
**குளு குளு தென்றல் காற்றைப் போன்றது**
**குழந்தைகள் உலகம்தான்'**

என்று நேருவின் குழந்தை உள்ளத்தையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

பழங்காலத்திலே தற்கால வசதிகள் யாவும் நிறைந்த 'ஆனந்த பவனம்' என்னும் தமது மாளிகையை நாட்டுக்குத் தானம் செய்தவர் ஜவஹர்லால்.

**'இந்த நாடே எனது வீடு**
**என்று நினைத்த நேரு**
**சொந்த வீட்டை நாட்டி னுக்கே**
**சொந்த மாக்கி விட்டார்'**

என்றுபாடியது நேருவின்நாட்டுப்பற்றையும் வள்ளல் தன்மையையும் காட்டுகிறது.

வேட்டைக்குச் சென்ற ஜவஹர், மான்குட்டி ஒன்றைச் சுட்டார். பாவம்! அந்த மான்குட்டி அவர் காலடியில் வந்து விழுந்து,

**எவர்க்கும் கெடுதி செய்தறியேன்;**
**என்னைச் சுட்டது சரிதானா?**

என்று கேட்பது போல் கண்ணீர் சிந்தியது.

**கண்ணீர் சிந்தும் மான் அதனைக்**
**கண்டார் ஜவஹர்; கண்டதுமே,**
**புண்ணாய்ப் போனது அவர்மனமும்;**
**புழுங்கிக் கண்ணீர் விட்டனரே.'**

என்னும் அடிகளைப்படிக்கும்போது நமது உள்ளம் உருகுகிறது. கண்ணீர் பெருகுகிறது. நேருவின் இளகிய நெஞ்சம் கண்ணெதிரே நிற்கிறது. 'அன்று முதல் துப்பாக்கிதனைத் தொடமாட்டேன்' என்று சத்தியம் செய்து இறுதி வரையில் தமது சொல்லைக் காத்தனர்' என்று கவிஞர் உருக்கமாகப் பாடியுள்ளார்.

இவ்வளவும்பாடியகவிஞர் நகைச்சுவையையும்விட்டுவிடவில்லை. டில்லிக்குப் போன சிறுவன், நேரு மாமாவைப் பார்த்து 'சல்யூட்' அடித்தானும்'யானைவேண்டும்' என்றானும் நேரு அவர்கள் ஒரு காகிதத்தை எடுத்து யானைப் படம் வரைந்து, சிறுவனிடம் கொடுத்தார். சிறுவன் பக்கெனச் சிரித்தான். ஜவஹர் சிறுவனைப் பார்த்து,

**யானை நீ கேட்டாய்; அன்புடன் தந்தேன்**
**தீனியே வேண்டாம்; செலவுமே இல்லை.**
**அடக்கமாய் இருக்கும்; அங்குசம் வேண்டாம்**
**மடித்து நீ பைக்குள் வைத்திடு,'' என்றார்**

படத்தை வாங்கிய சிறுவன்,

**''தலைவர் தந்தார் தங்கக் கையால்**
**விலைக்கா வேண்டும்? விற்கவே மாட்டேன்''**

என்று மார்தட்டிப் பெருமைப்படுகிறான்.

இப்படியெல்லாம் குழந்தைநண்பரைப்பற்றிக் குழந்தைக் கவிஞர் அவர்கள் எழுதிய இந்தப்புத்தகம் சிறுவர் சிறுமியர்க்குக் கிடைத்த ஒரு மாணிக்கப் புதையலாகும். இந்நூல் குழந்தைகளிடையே தேசபக்தியையும் நல்லொழுக்கத்தையும் வளர்ப்பதாகும். குழந்தைகளுக்குச் செய்யும் தொண்டு தேசத்துக்குச் செய்யும் சேவை; தெய்வத்துக்குச் செய்யும் திருப்பணி. இப்பணியினையே தமது வாழ்வின் லட்சியமாகக் கொண்ட வள்ளியப்பா அவர்கள் மேலும் பலப் பல குழந்தை இலக்கியங்கள் இயற்றி நீடுழி வாழ்க! வளர்க! வெல்க! விளங்குக! என அகம் குளிர-முகம் மலர வாழ்த்துகின்றேன்,

நேரு தந்த பொமையினை நித்தம் விரும்பிப்படிப்பவர்கள்
பாரில் சிறந்த பண்புடனே-பலவளம் பெற்றே வாழ்குவரே!

சென்னை — தணிகை உலகநாதன்
1-11-1977

# பதிப்புரை

குழந்தைகள் கொண்டாடும் நேருஜியின் வாழ்க்கையில் நடந்த பல சுவையான நிகழ்ச்சிகளைத் தமது பாடல்கள் மூலமாக இப்புத்தகத்தில் படம் பிடித்துக்காட்டுகிறார் குழந்தைக் கவிஞர் திரு. வள்ளியப்பா அவர்கள். இப்பாடல்களில்பெரும் பாலானவை 'கல்கி', 'கண்ணன்', 'திட்டம்', 'தமிழரசு' முதலிய இதழ்களில் வெளி வந்தவை.

குழந்தை உலகுக்குப் பலவகையிலும் சிறப்பாகப் பணி புரிந்து வருபவரும், சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவைத் தலைவரும், மாணவர் மன்றச் செயலாளரும், நல்லாசிரியர் விருது பெற்றவருமாகிய புலவர், கவிஞர் தணிகைஉலகநாதன் அவர்கள் இப்புத்தகத்திற்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி.

நம் தேசத் தந்தை மகாத்மா காந்தியைப்பற்றிக் குழந்தைக் கவிஞர் எழுதிய 'பாட்டிலே காந்தி கதை' என்ற நூல் இந்திய அரசின் பரிசையும் பலரது பாராட்டையும் பெற்றுள்ளது. காந்தி மகானின் வாரிசாக விளங்கிய நேருஜியைப் பற்றிய இந்த நூல் இப்போது இரண்டாம் பதிப்பாக வெளி வருகிறது

சென்னை
30-7-87

பதிப்பகத்தார்

## பாட்டும் பக்கமும்


| | | | |
|---|---|---|---|
| 1. | இன்று நேரு வாழ்வது | ... | 9 |
| 2. | சிறந்த நாள் | ... | 10 |
| 3. | பிறந்த நாள் | ... | 11 |
| 4. | சின்னப் பையன் | ... | 13 |
| 5. | நவம்பர் 14 | ... | 15 |
| 6. | இரண்டில் ஒன்று | ... | 17 |
| 7. | நல்ல கதைகள் | ... | 22 |
| 8. | குதிரைச் சவாரி | ... | 24 |
| 9. | ஆனந்த பவனம் | ... | 27 |
| 10. | தங்கை பிறந்தாள் | ... | 30 |
| 11. | மானின் கேள்வி | ... | 32 |
| 12. | வீட்டிலே படிப்பு | ... | 34 |
| 13. | இங்கிலாந்தில் கல்வி | ... | 37 |
| 14. | பறவைக் கப்பல் | ... | 40 |
| 15. | மேடைப் பேச்சு | ... | 41 |
| 16. | சிறையில் தேள் | ... | 44 |
| 17. | நேரு தந்த பொம்மை | ... | 47 |
| 18. | நேரு தலையில் புரு! | ... | 49 |
| 19. | காணுமல் போன நேரு! | ... | 51 |
| 20. | சிறையில் 9 ஆண்டுகள் | ... | 54 |
| 21. | நேரு தந்த யானை | ... | 55 |



# இன்று நேரு வாழ்வது...

அருமை நேரு பிறந்தது
அலகா பாத்து நகரிலே.
இளைஞர் நேரு படித்தது
இங்கி லாந்து நாட்டிலே.
தீரர் நேரு வாழ்ந்தது
தில்லி நகரம் தன்னிலே.
இன்று நேரு வாழ்வது
எங்கள் பிஞ்சு நெஞ்சிலே!

# சிறந்த நாள்

இன்று மிகவும் சிறந்தநாள்:
எங்கள் நேரு பிறந்தநாள்;
அன்பு மாமா உலகிலே
அவத ரித்த புனிதநாள். [இன்று]

சின்னஞ் சிறுவர் நடுவிலே
சிரித்துப் பேசி மகிழுவார்;
கன்னம் தொட்டுக் கிள்ளுவார்;
கையைப் பிடித்துக் குலுக்குவார் [இன்று]

அன்று சிறிய குழந்தையாய்,
அலகா பாத்தில் பிறந்தவர்,
என்றும் நமது நெஞ்சிலே
இருந்து வாழும் உத்தமர். [இன்று]



சின்னஞ் சிறுவர் நம்மையும்
சிவந்த ரோஜா மலரையும்
என்றும் மறந்தி டாதவர்;
எவரும் போற்றும் நல்லவர்.
[இன்று]

கண்ணைப்போல நாட்டினைக்
காத்து வளர்த்து வந்தவர்;
எண்ணம், வாக்கு ,செயலிலே
என்றும் தூய்மைஉடையவர்.
[இன்று]

பாரத தத்துக் குழந்தைகள்
பண்பு பெற்றுச் சிறக்கவே
நேரு கனவு கண்டனர்;
நிறைவு செய்வோம்
நாமுமே. [இன்று]



# பிறந்த நாள்

குழந்தை யெல்லாம் கூடுவோம்;
கூடிக் குதித்தே ஆடுவோம்;
மழலை மொழியில் பாடுவோம்;
மகிழ்ந்து தாளம் போடுவோம்.

''குழந்தை யோடு பழகவும்,
குழந்தை யோடு பேசவும்,
குழந்தை யோடு ஆடவும்
கொள்ளை ஆசை உள்ளது.''



என்று சொன்ன நேருவை
இந்த நாடு பெற்றநாள்.
என்றும் நமது நெஞ்சிலே
இருக்கும் நேரு பிறந்த
நாள்.

'எனது பிறந்த நாளையே
இன்ப மூட்டும் குழந்தைகள்
தினமாய்க் கொள்வோம்' என்ற
நம்
தேசத் தலைவர் பிறந்தநாள்.

இந்தி யாவில் மட்டுமா?
இல்லை; இல்லை; உலகிலே
எந்த நாட்டுக் குழந்தையும்
இவரைப் போற்றும் நல்ல
நாள்.

தேச நலனை எண்ணியே
தினமும் பாடு பட்டவர்;
ஆசை யாக நாமெலாம்
அழைக்கும் 'மாமா' பிறந்தநாள்.

நாட்டை ஆளும் தலைவராய்
நாமும் ஆக நல்வழி
காட்டிச் சென்ற நேருவின்
கதை படித்து மகிழுவோம்,



# சின்னப் பையன்


கங்கை, யமுனை, சரஸ்வதி
கலக்கும் இடத்தில் உள்ளது,
எங்கள் நேரு பிறந்ததாம்
இனிய நகரம் **அலகாபாத்.**


வருவாய் மிகவும் உடையவர்;
வக்கீல் தொழிலில் சிறந்தவர்;
அருமை நேரு தந்தையார்;
அவரின் பெயரே **மோதிலால்.**

பண்பு மிகுந்த அம்மையார்;
பழகு தற்கே இனியவர்;
அன்பு மிக்க நேருவின்
அன்னை **சொரூபராணியாம்.**

சின்ன வயதில் ஜவஹரைச்
செல்ல மாக அனைவரும்
'நன்னு' என்றே அழைத்தனர்.
என்ன அர்த்தம் தெரியுமா?

சின்னப் பையன் என்பதை
'நன்ஹு' என்பர் இந்தியில்
சின்னப் பையன் வளர்ந்தனன்;
'சிறந்த மனிதர்' ஆயினன்!






# நவம்பர் 14

நவம்பர் மாதம் பதினன்கு
நல்ல நாளாம் நாட்டிற்கு.
ஜவஹர் பிறந்தது அந்நாளே.
சகலரும் போற்றும் பொன்னுளே!

பிறந்த நாளில் ஜவஹர்லால்
பெரிதும் மகிழ்ச்சி கொண்டிடுவார்.
உறவினர் எல்லாம் அவர்வீட்டில்
உற்சா கத்துடன் கூடிடுவார்.

குழந்தை நேரு ஒருதட்டில்,
கோதுமைத் தானியம் மறுதட்டில்
அளவாய் வைத்து நிறுப்பார்கள்
அன்று காலை தராசினிலே

இப்படி நிறுத்த தானியத்தை
ஏழைக ளுக்கு வழங்கிடுவர்.
அப்புறம் நேரு புத்தாடை
அணிந்தே மிகவும் மகிழ்ந்திடுவார்.

வேந்தர் போல நடந்திடுவார்;
மிகவும் பெருமை கொண்டிடுவார்;
'நான்தான் இந்த விழாவிற்கே
நாயகன்' என்றே எண்ணிடுவார்.

வகைவகை யான பரிசுகளை
வந்தவர் தருவார் ஜவஹரிடம்.
'மிகமிக நன்றி' என்றிடுவார்;
விழுந்தே வணக்கம் செலுத்திடுவார்.

தின்றிடப் பற்பல பண்டங்கள்
செய்திடு வார்கள் சுவையாக.
நண்பர்கள், உறவினர் பலருடனே
நன்றாய் உண்டு களித்திடுவார்.



''என்றன் பிறந்த நாள்தன்னை
இதுபோல் அடிக்கடி கொண்டாட
அன்னை, தந்தை இருவரையும்
ஆசை யாக நான்கேட்டேன்.

அதிகம் ஆகுமே என்வயது
அடிக்கடி பிறந்த நாள்வந்தால்!
இதனை இளமையில்அறியேனே!''
என்றார் பின்னர் ஜவஹருமே'


# இரண்டில் ஒன்று!

ஆறு வயது இருக்கலாம்;
அந்தச் சிறிய வயதிலே
நேரு வீட்டில் நடந்ததோர்
நிகழ்ச்சி தன்னைக் கூறுவேன்:

ஆரும் இல்லா வேளையில்
அப்பா வுடைய அறையிலே
நேரு மெல்ல நுழைந்தனர்;
நெருங்கிச் சென்றார் மேஜையை

அழகுப் பேனா இரண்டினை
அங்கே நேரு கண்டனர்;
பளப ளக்கும் அவற்றையே
பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனர்.

''அருமைப் பேனா இரண்டுமே
அப்பா வுக்குத் தேவையா?
இரண்டில் ஒன்றை நானுமே
எடுத்துக் கொள்வேன்'' என்றனர்.



எடுத்தார் ஒன்றைக் கையிலே.
என்ன செய்தார் அதனையே?
படிக்கும் அறையில் வைத்தனர்;
பாய்ந்து வெளியே சென்றனர்.

வெளியில் சென்ற தந்தையார்
வீடு திரும்பி வந்தனர்.
களைத்து வந்த அவருமே
கண்டார் பேனா ஒன்றையே!

''இரண்டு பேனா இருந்தன;
எங்கே ஒன்று போனது?''
குரலில் கடுமை தெரிந்தது.
கோபம் பொங்கி வழிந்தது.

தந்தை குரலைக் கேட்டதும்
தாயார் ஓடி வந்தனர்.
''இந்த அறையில் உள்ளதை
எவர் எடுப்பார்?'' என்றனர்.

வேலை பார்க்கும் ஆட்களை
மிரட்டித் தந்தை கேட்டனர்:
''தோலை உரிப்பேன்; உண்மையைச்
சொல்வீர்,'' என்றே இரைந்தனர்.

ஆடி ஓடி வெளியிலே
ஆனந் தமாய்த் திரிந்தபின்
வீடு வந்த ஜவஹரோ
விவரம் புரிந்து கொண்டனர்.

சீறு கின்ற தந்தையைச்
சிறுவர் நேரு பார்த்ததும்,
நேரில் எதுவும் பேசவே
நெஞ்சில் துணிச்சல் இல்லையே!

''நானே பேனா எடுத்தவன்;
நானே தவறு செய்தவன்:
பேனா எடுத்த என்னையே
பெரிதும் மன்னித் தருளுவீர்''

என்று கூறத் துடித்தனர்.
ஏனோ தொண்டை அடைத்தது.
கண்கள் சிவந்த தந்தையைக்
கண்டு கலக்கம் கொண்டனர்!

வீடு முழுதும் தேடினர்,
வேலை யாட்கள் கடைசியில்,
தேடிப் பேனு எடுத்தனர்!
சிறுவர் நேரு அறையினில்!

உண்மை அறிந்த மோதிலால்
ஓடி வந்தார், கோபமாய்;
சின்னப் பையன் என்பது
சிறிது கூட நினைவில்லை.

கட்டி முத்தம் கொடுப்பவர்,
'கண்ணே, மணியே' என்பவர்,
பட்டுப் போன்ற உடலிலே
'பட்பட்' டென்றே அடித்தனர்.

சிவந்த உடலோ மிகமிகச்
சிவந்து போச்சே, அடியினுல்!
ஜவஹர் என்னும் இளந்தளிர்
சருகு போலச் சுருண்டது!

அழுது கொண்டே ஜவஹரும்
அன்னை அருகில் ஓடினர்;
கழுத்தைக் கட்டிக் கொண்டனர்;
கண்ணீர் வழிய நின்றனர்.

துடிதுடித்த மகனையே
தூக்கி அணைத்த அன்னையும்
தடித்துப் போன இடங்களைத்
தடவிக் கொடுத்தாள் பாசமாய்.

வலியைப் போக்க அன்னையும்
மருந்து போட்டாள் தினமுமே.
சிலநாள் சென்றே ஜவஹரும்
சிகிச்சை முடிந்து தேறினர்.

''நல்ல வழியில் நானுமே
நடக்க வேண்டும் என்பதில்,
அல்லும் பகலும் தந்தையார்
ஆர்வம் செலுத்தி வந்ததால்,

தவறு செய்த என்னையே
தண்டித் தாரே அந்தநாள்.
அவரைப் போன்ற நல்லவர்
எவரும் இல்லை,'' என்றனர்.



# நல்ல கதைகள்

இந்திய நாட்டின் பெருமையெலாம்
எடுத்துக் காட்டும் கதைகளையே
அன்னையும் பெரிய தாயாரும்
அன்பாய்க் கூறுவர் ஜவஹரிடம்.


இராமா யணமும் பாரதமும்
இன்னும் பலப்பல கதைகளுமே
சீராய்ச் சிறப்பாய்க் கூறிடுவர்;
சிறுவர் நேரு கேட்டிடுவர்.

முபாரக் அலிஎனும் ஒருபெரியார்
வீட்டில் கணக்குகள் எழுதுபவர்,
அபார மாகக் கதைசொல்வார்.
அவரை மிஞ்சவே ஆள்இல்லை!

அரபுக் கதைகள் அவர்சொல்வார்;
'அற்புதம்' என்பார் ஜவஹர்லால்.
இரவில் சிறிதும் தூங்காமல்
எத்தனை யோகதை கேட்டிடுவார்;

தீரரின் கதைகள் கேட்டிடுவார்.
 தியாகிகள் கதையும் கேட்டிடுவார்.
நேரினில் காண்பது போல் அந்த
 நிகழ்ச்சிகளெல்லாம் உணர்ந்திடுவார்.

ஆங்கில நாட்டார் இந்தியரை
 அடிமைப் படுத்திய கதைகேட்டார்.
தீங்குகள் எல்லாம் எவ்வாறு
 செய்தனர் என்றும் தெரிந்திட்டார்.



வெள்ளையர் இரக்கம் இல்லாமல்
 மிகவும் கொடுமைப் படுத்தியதை
உள்ளம் நொந்தே கேட்கையிலே
 உணர்ச்சி பொங்கும் ஜவஹருக்கே.

அப்பாவுக்கே அடுத்தபடி
 அலியை நேரு மதித்திடுவார்.
எப்போ தும்அவர் பக்கத்தில்
 இருந்திட மிகவும் விரும்பிடுவார்.



# குதிரைச் சவாரி

குழந்தை யாக இருந்த போது
ஜவஹர் லாலுடன்
குதிரைக் குட்டி செல்ல மாக
இருந்து வந்தது
அழகு மிக்க குதிரைக் குட்டி
அதனில் ஏறியே,
அலகா பாத்து நகரைச் சுற்றித்
தினமும் வருவாரே.
அன்று மாலை குதிரை மீது
ஜவஹர் ஏறியே
ஆனந் தமாய் ஊரை யெல்லாம்
சுற்றும் போதிலே,
என்ன அந்தக் குதிரைக் குட்டி
நினைத்து விட்டதோ!
என்றும் இல்லா வேகத் தோடே
ஓட லானது!

'விருட்' டென் றந்தக் குதிரைக் குட்டி
பாய்ந்து ஓடவே,
விழுந்து விட்டார், ஜவஹர் அங்கே
தரையின் மீதிலே!
திரும்பிக் கூடப் பார்த்தி டாமல்
குதிரைக் குட்டியும்
சென்று ஜவஹர் வீட்டி லேயே
சேர்ந்து விட்டது!


குதிரை மட்டும் திரும்பி வந்த
காட்சி கண்டதும்,
'குழந்தை எங்கே?' என்று பெற்றோர்
திகைக்க லாயினர்.
பதறிக் கொண்டே தந்தை தாயும்
மற்றை யோர்களும்
பலதி சைக்கும் ஓடிச் சென்று
தேட லாயினர்.

தரையில் வீழ்ந்த ஜவஹர் லாலோ
எழுந்து உடைகளைத்
தட்டி விட்டுக் கொண்டு வீடு
நோக்கி வந்தனர்.
குறைகள் எதுவும் இன்றித் திரும்பி
வந்த குழந்தையைக்
கூட்ட மாகத் தேடி வந்தோர்
வழியில் கண்டனர்.

'கண்ணே!' என்று அருகில் சென்று
கட்டிக் கொண்டனர்.
'காயம் உண்டோ?' என்று உடலைத்
தடவிப் பார்த்தனர்.
''ஒன்று மில்லை என்றன் குதிரை
வந்து சேர்ந்ததா?''
என்று கேட்டுக் கொண்டே ஜவஹர்
வீடு வந்தனர்.

குதிரை மீது ஜவஹ ருக்குக்
கோபம் வந்ததா?
கொஞ்சம் கூடக் கோபம் இல்லை
அன்பி ருந்தது!
அதிக மான வீரத் தோடு
குதிரை ஏறியே,
அடுத்த நாளும் சுற்ற லானர்
வழக்கம் போலவே!





# ஆனந்த பவனம்

வக்கீல் தொழிலில் மோதி லாலும்
வருவாய் அதிகம் பெற்ருர்;
மிக்க பேரும் புகழும் பெற்று
மேதை யாகத் திகழ்ந்தார்.

மெத்தப் பெரிய வீட்டை அவரும்
விலைக்கு வாங்க லானர்;
புத்தம் புதிதாய் அதனை அமைத்துப்
புதுமை பலவும் செய்தார்.

அந்த நாளில் அந்த ஊரில்
அந்த வீட்டில் மட்டும்
விந்தை யாக மின் விளக்கு
வீடு முழுதும் எரியும்.

அழகு மிக்க தோட்டம் தன்னில்
அருமை நீச்சல் குளமாம்.
பழகு வார்கள் நீந்து தற்கே
பலரும் அங்கே தினமும்.

பத்து வயது ஜவஹர் நீந்தப்
பழகிக் கொண்டார் நன்கு.
நித்தம் இரண்டு மூன்று முறைகள்
நீந்தி மகிழ்வார் அங்கு.

நேரு வோடு நண்பர் சிலரும்
நீந்து வார்கள் குளத்தில்;
யாரும் செய்யா வித்தை யெல்லாம்
நேரு செய்வார் அங்கே.

தண்ணீ ருக்குள் மூழ்கி மூழ்கி
'தம்' பிடித்தே இருப்பார்.
என்ன நேர்ந்த தென்று நண்பர்
எண்ணும் போதே எழுவார்.

மூச்சை அடக்கிப் பலகை போல
மிதப்பார் நீரின் மீதே!
நீச்சல் குளத்தைச் சுற்றி மக்கள்
நின்று பார்த்து மகிழ்வார்.

வசதி பலவும் நிறைந்த நல்ல
வளமை யான வீடு.
அசதி இல்லா நேரு வாழ்ந்த
அழகு கொஞ்சும் வீடு.

'இந்த நாடே எனது வீடு'
என்று நினைத்த நேரு.
சொந்த வீட்டை நாட்டி னுக்கே
சொந்த மாக்கி விட்டார்!

அந்தப் பெரிய மாளிகை
**ஆனந்த பவனமாம்.**
இந்தி யாவில் மட்டுமா?
எங்கும் தெரிந்த ஒரு பெயர்!





# தங்கை பிறந்தாள்

தங்கைப் பாப்பா பிறந்தி ருக்கும்
செய்தி கேட்டதும்—உடன்
தாவிக் குதித்துச் சிறுவ ரான
ஜவஹர் சென்றனர்.
''எங்கே, எங்கே எங்கே என்றன்
தங்கை?'' என்றனர்;—மிக
இனிய குரலில் கேட்டுக் கொண்டே
அறையில் புகுந்தனர்.

அங்கி ருந்த டாக்டர் ஒருவர்
ஜவஹர் லாலிடம்—''தம்பி,
அதிர்ஷ்டக் காரன் நீதான்,'' என்றே
தட்டிக் கொடுத்தனர்.
''தங்கை யாகப் பிறந்த தாலே
அப்பா சொத்திலே—நீ
பங்கு கொடுக்கத் தேவை யில்லை,''
என்றும் கூறினர்.



# தங்கை பிறந்தாள்

தங்கைப் பாப்பா பிறந்தி ருக்கும்
செய்தி கேட்டதும்—உடன்
தாவிக் குதித்துச் சிறுவ ரான
ஜவஹர் சென்றனர்.
''எங்கே, எங்கே எங்கே என்றன்
தங்கை?'' என்றனர்;—மிக
இனிய குரலில் கேட்டுக் கொண்டே
அறையில் புகுந்தனர்.

அங்கி ருந்த டாக்டர் ஒருவர்
ஜவஹர் லாலிடம்—''தம்பி,
அதிர்ஷ்டக் காரன் நீதான்,'' என்றே
தட்டிக் கொடுத்தனர்.
''தங்கை யாகப் பிறந்த தாலே
அப்பா சொத்திலே—நீ
பங்கு கொடுக்கத் தேவை யில்லை,''
என்றும் கூறினர்.

# மானின் கேள்வி



ஜவஹர் ஒருநாள் வேட்டைக்குத்
தனியே கிளம்பிச் சென்றனரே.
அவரது கையில் துப்பாக்கி
ஆயுத மாக இருந்ததுவே.

குட்டி மான்ஒன் றவர்முன்னே
குதித்துக் குதித்துச் சென்றிடவே,
சுட்டார் ஜவஹர் குறி வைத்து.
துடித்துக் கொண்டே மான்குட்டி,

வந்து ஜவஹர் காலடியில்
மயங்கி வீழ லானதுவே!
அந்தக் காட்சி ஜவஹரையே
அதிகம் கலக்கி விட்டதுவே.

''எவர்க்கும் கெடுதி செய்தறியேன்.
என்னைச் சுட்டது சரிதானா?''
ஜவஹரைப் பார்த்துக் கேட்பதுபோல்
தரையில் கிடந்தது மான்குட்டி.

கண்ணீர் சிந்தும் மான் அதனைக்
கண்டார் ஜவஹர்; கண்டதுமே
புண்ணாய்ப் போனது அவர்மனமும்.
புழுங்கிக் கண்ணீர் விட்டனரே.

''துப்பாக் கிதனை இனிமேல்நான்
தொடவே மாட்டேன்; சத்தியமே.
இப்படி ஜவஹர் கூறினரே
இறுதி வரையில் காத்தனரே.

# வீட்டிலே படிப்பு

''பள்ளிக் கூடம் செல்ல வேண்டாம்''
என்று மோதிலால்
பத்து வயது முடிந்த மகனைப்
பார்த்துக் கூறினார்.
''வெள்ளைக் காரர் ஒருவர் நமது
வீட்டில் தங்கியே
விரும்பும் பாடம் யாவும் கற்றுத்
தருவார்,'' என்றனர்.

பிள்ளை மிகவும் ஆர்வத் தோடு
படிக்கத் தொடங்கவே,
புரூக்ஸ் என்னும் ஆசான் மிகவும்
மகிழ்ச்சி கொண்டனர்.
கல்வி தன்னைச் சிறந்த முறையில்
கற்றுத் தந்தனர்.
கருத்தில் பதியும் வகையில் நன்கு
எடுத்துக் கூறினர்.

சிறுவர் நூல்கள் பலவும் நேரு
படித்து மகிழ்ந்தனர்;
சிறந்த உலக இலக்கி யங்கள்
விரும்பிக் கற்றனர்.




அருமை யான கவிதை நூல்கள்
ஆழ்ந்து படித்தனர்.
அவற்றைப் படித்துச் சுவைக்கும் வகையில்
பயிற்சி பெற்றனர்.

விந்தை மிக்க விஞ்ஞா னத்தை
விரும்பும் வகையிலே
வேடிக் கையாய்க் கூறி புரூக்ஸ்
ஆர்வம் ஊட்டினர்.

அந்த வீட்டில் ஆய்வுக் கூடம்
ஒன்றும் அமைத்தனர்.
அதிலே தினமும் சோத னைகள்
நடத்திப் பார்த்தனர்.

மூன்று வருடம் இந்த வகையில்
கல்வி கற்றனர்.
மேதை யாக விளங்க நல்ல
பாதை அமைத்தனர்.

ஊன்றி எதையும் படிக்க நேரு
பழகிக் கொண்டனர்.
உள்ளந் தன்னில் நல்ல தெல்லாம்
பதித்துக் கொண்டனர்.





# இங்கிலாந்தில் கல்வி

ஆறு யிரம்மைல் தூரத்தில்
ஆங்கில மாணவர் தம்முடனே,
நேராய்ப் பழகிப் படித்திடவே
நேருவை அனுப்பிட வேண்டுமென,

தந்தை திட்டம் போட்டனரே;
தக்கதோர் நாளும் குறித்தனரே!
அந்தச் சமயம் ஜவஹருக்கே
ஆனது வயது பதினைந்தே!

அப்பா, அம்மா தங்கையுடன்
அருமை நேரு புறப்பட்டுக்
கப்பல் ஏறிச் சென்றனரே;
களிப்புடன் லண்டன் சேர்ந்தனரே.

ஹாரோ பள்ளியில் இடம் பிடித்துக்
கல்வியைத் தொடர்ந்து கற்றனரே
பேரார் வத்துடன் படித்தனரே.
பெற்றவர் நாடு திரும்பினரே.

வெள்ளை மாணவர் பலருக்கும்
விளையாட் டில்தான் கவனமெலாம்.
நல்லவை எல்லாம் அறிவதிலே
நாட்டம் கொண்டார் நம்ஜவஹர்.

செய்தித் தாள்கள் படித்திடுவார்;
தினமும் உலக நிலை அறிவார்;
ஐயம் ஏதும் அவர்க்கிருந்தால்
அடுத்த வரிடத்தில் கேட்டறிவார்.


அந்நியர் ஆட்சியை அகற்றிடவும்
அடக்கு முறைகளை எதிர்த்திடவும்,
இந்திய மக்கள் திரண்டெழுந்தார்
என்பதை அறிந்து மனமகிழ்ந்தார்.

பள்ளியில் ஒழுங்காய்ப் படித்ததனால்
பரிசாய்க் கிடைத்ததோர் புத்தகமே
உள்ளே திறந்து படித்ததுமே
ஊக்கமும் உணர்ச்சியும் பெற்றனரே.

அடிமை நாடாய் இத்தாலி
அல்லற் பட்ட நேரத்தில்
விடுதலை பெறவே உழைத்தவராம்
வீரத் தலைவர் கரிபால்டி

அவரது வாழ்க்கை வரலாறே
அந்தப் பரிசுப் புத்தகமாம்.
சுவைமிகும் அந்த நூல்படித்தே
சுதந்தர உணர்ச்சி பெற்றனராம்.





# ஆகாய விமானம்

இங்கி லாந்தில் ஜவஹரும்
இருந்து வந்த நாளிலே
அங்கே வந்த நாள் இதழ்
அனைத்தும் படித்து வந்தனர்.

பறவை போல வானிலே
பறந்து பறந்து செல்லவே,
விரும்பிச் சிலரும் முயன்றதை
வியந்து படித்து மகிழ்ந்தனர்.

''அண்ணன், தம்பி இருவராம்
ஆர்வில், வில்பர் என்பவர்
விண்ணில் பறக்கும் வகையிலே
விமானம் கண்டு பிடித்தனர்'',

என்ற செய்தி அறிந்ததும்
எழும்பிக் குதித்தார் ஜவஹரும்.
அன்று தமது தந்தைக்கே
அன்புக் கடிதம் அனுப்பினர்.

''விரைவில் இந்த வாரமே
விமானம் ஏறி அங்குநான்
வரவே முடியும்'' என்றுதான்
மகிழ்ச்சி யோடே எழுதினர்!

# மேடைப் பேச்சு

இங்கி லாந்தில் படித்த போது
மேடை ஏறியே
இளைஞர் நேரு பேசு தற்கே
கூச்சம் கொள்ளுவார்;
சங்கம் ஒன்றை நிறுவி நமது
தேச மாணவர்,
தக்க முறையில் பேச அங்கே
பழகி வந்தனர்.





நே.பொ-3

மாத முழுதும் ஒருநாள் கூடப்
பேசி டாதவர்
மன்றத்திற்கே அபரா தந்தான்
செலுத்த வேண்டுமாம்.
ஆத லாலே மேடை ஏறிப்
பேசி டாதநம்
அருமை நேரு அபரா தத்தைத்
தொடர்ந்து செலுத்திஞர்.

சொந்த நாடு திரும்பி வந்த
பிறகு மக்களின்
துயரம் யாவும் கேட்டுக் கேட்டுத்
துடிது டித்தனர்,
அந்தச் சமயம் மக்களி டத்தில்
சென்று தினமுமே
ஆறு தல்கள் கூறும் வகையில்
பேசி வந்தனர்.

கூச்சம் கொஞ்சம் கொஞ்ச மாகக்
குறைந்து வந்தது.
கூட்டம் அதிகம் அதிக மாகப்
பெருகி வந்தது.

பேச்சைக் கேட்டுக் கேட்டு மக்கள்
உணர்ச்சி பெற்றனர்;
பெரிய பெரிய உண்மை யெல்லாம்
எளிதில் அறிந்தனர்.

இமயம் தொட்டுக் குமரி மட்டும்
நேரு சென்றனர்;
ஏழை எளிய மக்க ளுடனே
உறவு கொண்டனர்;
அமைதி யாக காந்தி வழியில்
புரட்சி செய்தனர்;
அடிமை வாழ்வை அகற்று தற்கே
வழியும் தேடினர்.

கூடப் படித்த மாண வர்முன்
பேசப் பயந்தவர்,
கொட்டும் மழைபோல் லட்சம் மக்கள்
முன்னே பேசினர்.
நாடு போற்றும் தலைவ ரென்ற
பெயர் எடுத்தனர்!
நாக்கு வன்மை உடையார் என்ற
புகழும் பெற்றனர்!

# சிறையிலே தேள்!

ஜெயிலில் நேரு இருந்த போது
நடந்த நிகழ்ச்சியைத்
தெரியும் வகையில் உங்க ளுக்குக்
கூறப் போகிறேன்;
வெயிலின் கொடுமை தாங்கி டாமல்
கொடிய தேள் ஒன்று
மெல்ல அவரின் அறையி னுள்ளே
வந்து சேர்ந்ததாம்!

கண்ட வுடனே நேரு பதற்றம்
கொள்ள வில்லையாம்.
கல்லைத் தூக்கி மேலே போட்டுக்
கொல்ல வில்லையாம்.
'என்ன செய்தார்?' என்று தானே
நீங்கள் கேட்கிறீர்?
எடுத்துச் சொல்வேன்! பொறுமை யாகக்
கேட்பீர் நண்பரே.



சுருக்குப் போட்டுக் கயிற்றி ஞலே
கொடுக்கில் கட்டினர்.
தூக்கிச் சுவரில் தேளேக் கட்டித்
தொங்க விட்டனர்.
அருகில் நின்று சிரித்த படியே
அதனைப் பார்த்தனர்.
அந்தப் பார்வைக் குள்ளே யுள்ள
அர்த்தம் என்னவோ?

தொங்கு கின்ற தேளேக் கண்டே
அங்கு வந்திடும்
சொந்தக் காரத் தேள்கள் ஓடி
ஒளியு மென்றுதான்
அங்கு ஜவஹர் தேளேக் கட்டித்
தொங்க விட்டனர்.
ஆனல், அதுவும் எந்த விதமோ
தப்பி விட்டதாம்!

அங்கு மிங்கும் ஜவஹர் தேளைத்
    தேடிப் பார்த்தனர்.
அறையில் அதனைக் கண்டு பிடிக்க
    முடிய வில்லையாம்.
இங்கே யிருந்தால் கயிற்றில் மீண்டும்
    தொங்க வேண்டுமே!
என்று பயந்து கொண்டே தேளும்
    ஓடி விட்டதோ!

# நேரு தந்த பொம்மை

நேரு காரில் வருவதை
நேரில் காணும் ஆசையால்,
ஊரி லுள்ளோர் அனைவரும்
ஒன்று திரண்டு வந்தனர்.

தெருவில் நேரு செல்கையில்
சின்னச் சின்னப் பொம்மைகள்
ஒருவர் விற்கக் கண்டனர்;
உடனே கீழே இறங்கினர்.

அந்தப் பொம்மைக் காரரின்
அருகில் நேரு சென்றனர்;
''இந்த அழகுப் பொம்மைகள்
என்ன விலையோ?'' என்றனர்.



பொம்மைக்காரர்:

ஒன்றின் விலையைக் கூறவா?
ஓர் அணாத்தான் விற்கிறேன்.

நேருஜி:

நன்று. பொம்மை யாவையும்
நானே வாங்கிக் கொள்கிறேன்.

பொம்மைக்காரர்:

ஐந்து ரூபாய் தானய்யா
அத்தனைக்கும் மொத்தமாய்.

நேருஜி:

இந்தா ரூபாய் தருகிறேன்.
எல்லாம் எடுத்துக் கொள்கிறேன்.

நேரு நோட்டை நீட்டினார்
நிறையப் பொம்மை வாங்கினார்.
யாருக் காக வாங்கினார்.
யாவ ருக்கும் தெரியுமே!

அங்கு நின்ற பிள்ளைகள்
அனைவ ருக்கும் நேருஜி
தங்கக் கையால் பொம்மைகள்
தந்து தந்து மகிழ்ந்தனர்.

அருமை மாமா நேருஜி
அன்பாய்ப் பொம்மை தந்ததைப்
பெருமை யோடு பிள்ளைகள்
பேசிப் பேசிக் களித்தனர்.



# நேரு தலையில் புறு!

டில்லி நகரில் நேஷனல்
　　ஸ்டேடி யத்தில் சிறுவர்கள்
எள்ளு விழவும் இடமின்றி
　　இலட்சக் கணக்கில் கூடினர்,

'இன்று மிகவும் சிறந்தநாள்;
　　எங்கள் நேரு பிறந்தநாள்!'
என்று கூறி ஆடினர்;
　　இன்பம் பொங்கப் பாடினர்.

காரில் நேரு வருவதைக்
　　கண்ட வுடனே சிறுவர்கள்,
''நேரு வாழ்க!'' என்றனர்;
　　நீண்ட நேரம் முழங்கினர்.

''யுத்தம் நீங்கி உலகெலாம்
　　ஒன்று கூடி வாழவே
நித்தம் உழைத்த நேருவே,
　　நீடு வாழ்க!'' என்றனர்.

அவர்க ளுக்கு நடுவிலே
அழகு வெள்ளைப் புறுவினை
ஜவஹர் பறக்க விட்டனர்.
'சர்' ரென் றுயரச் சென்றது.

வட்ட மிட்டுத் திரிந்தது
வானில் சிறிது நேரமே.
சட்டென் றிறங்கி வந்தது.
ஜவஹர் தலையில் அமர்ந்தது.

வெள்ளைக் குல்லா மீதிலே
வெள்ளைப் புறு அமர்ந்ததும்,
பிள்ளை யெல்லாம் மகிழ்ந்தனர்;
பெரிதும் கூச்சல் போட்டனர்.

தலையில் வெள்ளைப் புறுவுடன்
சாந்தம் தவழும் முகத்துடன்
சிலைபோல் நேரு நின்றனர்,
சிறுவர் பார்த்து மகிழவே.

நேரு பிறந்த நாளிலே
நிகழ்ந்த இந்தக் காட்சியை
நேரில் பார்த்தோர் இந்தநாள்
நினைத்துப் பார்த்தே மகிழ்கிறார்!

# காணாமல் போன நேரு!

மாலையில் ஒருநாள் நேருவை வீட்டில்
காணோம், காணோமே!
மாளிகை முழுதும் தேடிப் பார்த்தும்
காணோம், காணோமே!
சோலையில் எங்கும் சுற்றிப் பார்த்தும்
காணோம், காணோமே!
சுறுசுறுப் பாகத் தேடிப் பார்த்தும்
நேருவைக் காணோமே!

காவலர் எங்கும் தேடிப் பார்த்தும்
காணோம், காணோமே!
கலக்கினர் டில்லி நகரம் முழுவதும்
காணோம், காணோமே!
தீவிர மாகப் பலரும் தேடியும்
காணோம், காணோமே!
தெரிந்தவர்க்கெல்லாம்டெலிபோன்செய்தும்
நேருவைக் காணோமே!

எந்த நிகழ்ச்சியும், அந்தச் சமயம்
இல்லை; அதனாலே
''எங்கே சென்றார்? எங்கே சென்றார்?''
என்றே கேட்டனரே.
வந்தவர் போனவர் காதில் இந்தச்
சேதி விழுந்திடவே,
மாநகர் எங்கும் காட்டுத் தீபோல்
பரவிட லானதுவே!

காவலர் பலரும் நகரம் முழுவதும்
தேடிப் பார்த்திடவே,
கடைசியில் நேருவைக் கண்டு பிடித்தனர்;
கண்டு பிடித்தனரே!
ஆவல் பொங்கப் பூங்கா ஒன்றில்
குழந்தைகள் நடுவினிலே
அடடா, நேரு இருந்தது கண்டு
அசந்தே போயினரே!

மழலை மொழியைக் கேட்டுக் கேட்டு
மகிழ்ச்சியில் மூழ்கினரே.
மறந்தனர் இந்த உலகம் யாவையும்
மறந்தே போயினரே.



குழந்தைகள் அந்தப் பூங்கா நடுவில்
கூடிப் பாடிடவே
குஷியாய் நேருவும் குழந்தை போலவே
ஆடிப் பாடினரே.

கோடை வெயிலைப் போன்றது என்றும்
அரசியல் உலகம்தான்.
குளுகுளு தென்றல் காற்றைப் போன்றது
குழந்தைகள் உலகம்தான்.
தேடியே வந்தார் குழந்தைகள் உலகைத்
திருட்டுத் தனமாக.
தெரிந்தது நேருவின் குழந்தை உள்ளம்
தெள்ளத் தெளிவாக!

# சிறையில் 9 ஆண்டுகள்

எத்தனை ஆண்டுகள் சிறையினிலே,
    இருந்தார் ஜவஹர் தெரிந்திடுமோ?
மொத்தம் ஒன்பது ஆண்டுகளாம்.
    மொத்தம் ஒன்பது தடவைகளாம்.

சொத்து சுகங்கள் விரும்பினரா?
    சொந்தக் காரரை நினைத்தனரா?
உத்தமர் நேரு நாட்டிற்கே
    உழைத்தனர்,
        உழைத்தனர்,
            கடைசிவரை!

# நேரு தந்த யானை

டில்லிக்குப் போனேன்;
நேருவைப் பார்த்தேன்;
'சல்யூட்' செய்தேன்;
சாக்லேட் தந்தார்.

"என்னடா கண்ணு
ஏதடா வேணும்?
சொன்னால் தருவேன்
சொல்வாய்" என்றார்.

"அன்புள்ள மாமா,
அவசியம் வேணும்.
சின்னதாய் யானை
சீக்கிரம் தருவீர்,"

என்றேன். உடனே
எடுத்தார் காகிதம்
என்னவோ அதிலே
எழுதிக் கொடுத்தார்.


பார்த்தேன் அதையே.
படத்தில் யானை!
பார்த்தேன் அவரை;
'பக்'கெனச் சிரித்தார்.

''யானை நீ கேட்டாய்.
அன்புடன் தந்தேன்.
தீனியே வேண்டாம்.
செலவுமே இல்லை.

அடக்கமாய் இருக்கும்,
அங்குசம் வேண்டாம்.
மடித்துநீ பைக்குள்
வைத்திடு'' என்றார்.

ஜோர் ஜோர் யானை!
ஷோக்கான யானை!
யார்தான் தருவார்
இதுபோல் யானை?

தலைவர் தந்தார்
தங்கக் கையால்.
விலைக்கா வேண்டும்?
விற்கவே மாட்டேன்!





# நேரு மாமாவும் குழந்தைக்கவிஞரும்

*1956, நவம்பர் 14.*

நேரு மாமா பிறந்த நாள்.

அந்த நல்ல நாளில், நேரு மாமாவைக் காணவும், அவருடன் பேசவும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது, குழந்தைக் கவிஞருக்கு!

ஆம், 1956-ல் அனைத்து இந்தியப் புத்தகக் காட்சியை டில்லியில் நடத்தியது சாகித்ய அகாதமி. அங்கே தமிழ்ப் பிரதிநிதியாகச் சென்றிருந்தார் குழந்தைக் கவிஞர். நேரு மாமா, தமது பிறந்த நாளில் அக் காட்சியைக் காண வந்தார். தமிழ்ப்பகுதிக்கு அவர் வந்தபோது எடுத்த புகைப்படந்தான் மேலே உள்ளது.